# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 67 — 1973 ජූලි 06 වැනි සිකුරාදා — 1973.07 06

67 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு யூலை மாதம் 06 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 273 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 275 |
| துணை விதிகள் .. .. .. | 275 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுகள் .. .. .. | — |
| ஆதன விறபனைகள் .. .. .. | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. | 276 |


கவனிக்க.—மாநகர சபைகள் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ந் திகதிய இலக்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### வாடிவீட்டுச்சட்டம்

(275 ஆம் அத்தியாயமான) வாடிவீட்டுச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973 ந் ஆண்டு யூன் மீ 27 ந் உ.

### கட்டளை

யாழ்ப்பாண வாடி வீட்டின் கட்டுப்பாட்டினை யாழ்ப்பாணப் பிராந்தியத்து உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு உரித்தாக்கி 28.12.1968 லன்று ஆக்கப்பட்டு 29.12.68 இன் 14,834/2 ஆம் இலக்க அரசாங்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை 10.07.1973 ந் திகதியிலிருந்து நீக்கஞ் செய்யப்படுகிறது.

7–207—06.07.73 ந் திகதிய 'வர்த்தமானி இல. 67

---

எல்ஜீடீ/எச்சீ/7/6/4/9

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

கட்டளை

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களை அனுசரித்து, அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக ஆகிய நான், பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள எகொடபத்துக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையின் விடயத்தில், சொல்லப்பட்ட பிரிவின் (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகாதென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

பீலிக்ஸ். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973.6.13,

7–189—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

## கடுவெலைக் கிராமச்சபை

### பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டம்

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்தின் 3 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

பீலிக்ஸ். ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு ஜூன் மீ 8 ந் உ.

### விதி

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1919, எப்பிரல் 4 ன் 7,004 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1943, எப்ரல் 9 ன் 9,108ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப்பட்ட விதிகள், கடுவெலைக் கிராம சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசம் சம்பந்தப்பட்டவரையில் அதன் கண்ணுள்ள 3 ம் விதியிலுள்ள கட்டண அளவுத்திட்டத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய கட்டண அளவுத்திட்டத்தை வைப்பதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

| | | ஒரு நாளைக்கு | | | ஒரு மாதத்துக்கு | | | 6 மாத காலத்துக்கு | | | திசெம்பர் 31 உடன் முடிவடையும் ஒரு வருடத்துக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ச. | | ரூ. | ச. | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| 199 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசனவசதி செய்யப்பட்டிருக்குமிடத்து | .. | 10 | 0 | .. | 30 | 0 | .. | 125 | 0 | .. | 175 | 0 |
| 199 பேருக்கு மேற்பட்டு ஆனால் 399 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசனவசதி செய்யப்பட்டிருக்குமிடத்து | | 15 | 0 | .. | 50 | 0 | .. | 200 | 0 | .. | 250 | 0 |
| 399 பேருக்கு மேற்பட்ட ஆட்களுக்கு ஆசனவசதி செய்யப்பட்டிருக்குமிடத்து | .. | 20 | 0 | .. | 60 | 0 | .. | 300 | 0 | .. | 400 | 0 |

7-66—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

## மின்சக்திச் சட்டம்

1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின் 46 ம் பிரிவின் கீழும் நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் சுன்னாகம் பட்டின சபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜூன் மீ 21 ந் உ.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில்—"சட்டம்" எனில் 1957 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியா ஆம் ஆண்டின் 59 யமாம்) மின்சக்திச் சட்டம் எனப்பொருள்படும். "உத்தரவுப் பத்திரம்" எனில் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் சுன்னாகம் பட்டினசபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரம் எனப்பொருள்படும். "உத்தரவுப் பத்திரக்காரர்" எனில் சுன்னாகம் பட்டினசபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப் பத்திரக்காரரிடமிருந்து மின்சக்தி பெறவிரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப் பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப் பத்திரக்காரருக்கு விண்ணப்பஞ் செய்யவேண்டும் ; மேலும்

(2) வழங்கு கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப் பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்தவேண்டும். அல்லது உத்தரவுப் பத்திரதாரர் அவ்விதம் கேட்டால், சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் உத்தரவுப் பத்திரதாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

3. (அ) உத்தரவுப் பத்திரக்காரரின் மின்சக்தி வழங்கு மூலக்கம்பிகளுடன் இணைக்கக் கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையை மின்னெந்திரவியற் பொறியியலாளர் கழகத்தினால் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைய அவ்வேலையைச் செய்து முடிக்கக் கூடிய திறமையுள்ள ஒரு தொழிற்தாபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப்பத்திரகாரரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்துப் பரீட்சித்துப் பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென உத்தரவுப் பத்திரக்காரர் திருப்தியடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைவாக அமைக்கப்படும் வரையில் அம்மனையகத்திற்கு மின்சக்தி விநியோகம் செய்யப்படமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம்மின்சக்திக்காக உத்தரவுப் பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில் பணம் செலுத்த வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவைவடக் கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும் தாங்கு பலகையும் உத்தரவுப் பத்திரக்காரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப் பத்திரக்காரரினால் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப் பத்திரக்காரரின் பிரதான பியூஸ், மானி ஆகியவற்றின் கம்பிகள் வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47(3) ம் பிரிவின்படி துணிக்கப்பட்ட நிறுப்பு எதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டும் இணைப்பதற்குரிய சலார் உத்தரவுப் பத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாளர் முற்பணமாகச் செலுத்தி விட வேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரினதும் கம்பிகளின் அல்லது பொருத்துகளின் சில பாகங்களில் ஒழுக்கு இருக்கும் பட்சத்தில், தமது மனையகத்தில் மானி காட்டும் சக்திச் செலவு யாவற்றுக்குமே மின்சக்திச் சட்டத்தின் 41 ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்டபின்னர், ஏற்கனவே, உபயோகித்துவந்ததைவிடப் பெரிய அளவான எந்த விளக்கையும் விசிறியையும் அல்லது மோத்தரையும் உபயோகிக்க அல்லது மேலதிகமாக விளக்கெதையும் அல்லது மின்சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவரும் அப்படியான வேலை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப் பத்திரக்காரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததைவிடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு விசிறி அல்லது மோத்தர் எதையும் அல்லது மேலதிக விளக்கு அல்லது சக்தியைச் செலவிடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட்டுச் சோதித்துத் திருப்திப்படாதவரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவேனும் பிரதான நிறுப்புடன் இணைக்கவோ இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7. (அ) எவ்வீட்டிலும் உத்தரவுப் பத்திரக்காரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில் பாவனையாளர் உடனடியாக உத்தரவுப் பத்திரக் காரருடைய விசை நிலைய அல்லது சகவிசை நிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்கவேண்டும்.

(ஆ) உத்தரவுப் பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரையும் தவிர்ந்த வேறெவரும் உத்தரவுப் பத்திரக்காரரின் சொத்தான உருகிப்போன பியூசை மாற்றக்கூடாது.

(இ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப் பத்திரக்காரருக்கு சொந்தமான பியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப் பத்திரக்காரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப் பட்டால் உத்தரவுப் பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

8. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதி சக்தி விநியோகத் தடைப்பாட்டினால் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப் பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாகமாட்டார்.

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்த பின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீளவும் இணைப் பதற்காக உத்தரவுப் பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான ஒரு கட்டணத் தைப் பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்துவிடல் வேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபட வேண்டியனவாகக் கருதப்படும்.

(ஆ) ஒரு கணக்கிற் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்கு கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்படாவிட்டால் உத்தரவுப்பத்திரக்காரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப் பத்திரக்காரருக்கு எழுத்தில் மூன்று முழு நாளைய அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

(ஆ) (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படாத விடத்து தனது வீட்டிலுள்ள உத்தரவுப் பத்திரக்காரரின் உபகரணங் களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாகவிருப்பதுடன், பாவனையாள ருக்கு அவ்விநியோகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கிடைத்த திகதியிலிருந்து மூன்று நாட்களுக்கு அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணஞ் செலுத்துவதற்குப் பொறுப்பாளி யாக இருப்பர் எனினும், சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப் பத்திரக்காரரால் விநியோகம் துணிக்கப்பட்டால் துணிக்கப்பட்ட நேரம் வரைக்கும் அவ் வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரம் பாவனையாளர் பணஞ் செலுத்தப் பாத்திரராவர்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்கு சேர்த்தல், மாற்றுதல், செம் மைப் படுத்தல் உட்பட்ட மின்சார இணைப்பு வேலை எதனையும் தொடங்கு வதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத் தரவுப் பத்திரகாரருக்குக் கொடுத்து உத்தரவுப் பத்திரக்காரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக்கூடாது.

13. உத்தரவுப் பத்திரக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன் அங்கீகாரத்தைப் பெறுது எம் மனையகத்திலும் புதிய இணைப்பு எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப் பத்திரக்காரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை, அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனையகத் துக்கு மின்சக்தி வழங்குவதற்கு உத்தரவுப் பத்திரக்காரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப் பத்திரக்காரரின் மின்சார விநியோக மூலக் கம்பி களோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப் பத்திரக்காரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதி பெறுமல் விஸ்தரிப்பு ஏதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றுக உத்தரவுப் பத்திரக்காரருடைய மின்சார விநியோக மூலக் கம்பிகளிலிருந்து துண் டிக்கப்படப் பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வைத்துள்ள படி வத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித் தியாலங்களுக்குக் குறையாத காலத்துள் உத்தரவுப் பத்திரக்காரரின் காரியாலயத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

7–65—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**உள்ளூராட்சிச் சேவை**

உள்ளூராட்சி தட்டெழுத்தாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பிற்கான (தமிழ்) பரீட்சை 28.10.1972

28.10.72 தேதியன்று நடாத்தப்பட்ட பரீட்சையின் முடிவுகளின் பேரில், மேற்படி பதவிக்கு நியமனத்தின் பொருட்டு, கீழ்க்காணும் பரீட்சார்த்தி கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்களென இத்தால் அறியத் தரப்படுகிறது.

1. திரு. எம். குமாரசுவாமி, தாவடி வடக்கு, கொக்குவில்.
2. செல்வி எம். குணபூஷணி அம்மா, வத்திராயன், செம்பியன்பற்று.

2. உடனடியாக நியமனங்களைச் செய்வதற்கு அதிகார சபை பொறுப் பேற்கவில்லை. பதவி வெற்றிடங்கள் வரும்பொழுதும், வந்தாலும், அவர் களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

எட்கா பர்னுந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு,
16.6.73.

7–15—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

# துணை விதிகள்

எல்டீபீ 10/68

**கிளிநொச்சிப் பட்டினசபை**

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் கிளிநொச்சிப் பட்டினசபையால் ஆக்கப்பட்டு அக் கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினுல் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங் களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூன் மீ 21 ந் வ.

**மலகூட சேவைகள் தொடர்பிலான துணைவிதிகள்**

1. (அ) எவ்வளவுகளினதும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் ஒருவர், தமது வளவிற்கு மலகூட சேவைகள் ஏற்பாடு செய்யப்படவேண் மென் எப்போதாவது தேவைப்படுத்தி அப்பொருள்பட அவர் தலைவருக்கு எழுத்திலான ஒரு விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

(ஆ) தலைவர் அவசியமாயின் உரிய முறையில் விசாரணை செய்த பின்னர், (அ) என்னும் பந்தியின் கீழ் அவருக்குச் செய்யப்பட்ட விண்ணப் பம் எதனையும் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது மறுத்துவிடலாம்.

2. சபையால் ஏற்படுத்தப்பட்டுள்ள மலகூட சேவையினுல் பயனடையும் வளவெதனதும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர், ஒவ்வொரு மாதத்திற்கும் சுத்தம் செய்யப்படும் ஒவ்வொரு வாளிக்கும் இரண்டு ரூபா ஐம்பது சதம் என்ற விகிதப்படியும், கழுவப்படும் ஒவ்வொரு நீரடைப்பு மலகூடத்திற்கும் ஐம்பது சதம் என்ற விகிதப்படியும் கணக்கிடப் பட்ட ஒரு மலகூடக் கட்டணத்தைத் தலைவருக்குச் செலுத்தல் வேண்டும்.

3. இரண்டாம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கட்டணம், அதனைச் செலுத்துவதற்குரியதையடுத்து வரும் மாதத்தின் பத்தாம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ தலைவரின் அலுவலகத்தில் அல்லது அத்தகைய கட்டணத்தை அறவிடுதற்குத் தலைவரால் முறைப்படி எழுத்தில அதிகாரம் வழங்கப்பட்ட ஆள் எவரிடமாவது செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆயினும், எப்படியிருப்பினும், எவ்வளவுகளினதும் சொந்தக்காரரோ அல்லது குடியிருப்பாளரோ, குறிப்பிட்ட ஏதாவதொரு மாதம் முழு வதும் அவ்வளவு மூடப்பட்டிருக்கும் எனத் தலைவருக்கு முன்கூட்டியே எழுத்தில் அறிவித்தல் கொடுத்து, அதன் பின்னர் நிசமாகவே அவ்வளவு களில் அம் மாதத்தின்போது யாரும் தங்கியிருக்கவில்லையெனத் தலைவர் திருப்திப்படச் செய்தால், அவ்வளவுகள் தொடர்பில் அம்மாதத்திற்கு மலகூடக் கட்டணம் செலுத்தப்படவேண்டியதில்லை.

4. இத் துணைவிதிகளுள் எதனதும் மீறுகை ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்தினுல் தண்டிக்கப்படக்கூடிய தாகவிருக்கும்.

5. இத்துணைவிதிகளில்—

"தலைவர்" என்பது சபையின் தலைவர் எனப்பொருள்படும், அத்துடன்

"சபை" என்பது கிளிநொச்சிப் பட்டின சபை எனப்பொருள்படும்.

7–167—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

### கலேவலப் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ), 152 ஆகிய பிரிவுகளின்கீழ் கலேவலப் பட்டின சபையினால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீக ரிக்கப்பட்ட துணைவிதி.

ஜீ. பீ. விக்கிரமநாயக்கா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 21. 6.1973.

**துணைவிதி**

இதனோடுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள மனைத்தலங்களும் கலேவெலப்பட்டினத்துள் உள்ள சகல நெல்வயல்களும் (256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ) ஆம் பிரிவின் கீழ் அறவிடப்பட்டதும் 1973 சனவரி 08 ந் திகதியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு 1973 பெப்புருவரி 02 இன் 45 ஆம் இலக்க இலங்கைக் குடியரசுக் கசெற்றின் IV ஆம் பாகத்தில் பிரசுரிக்கப்பட்டதுமான விசேட மலகூட வரியிலிருந்து 1973 ஆம் ஆண்டுக்கு விலக்களிக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை**

1. ஆம் வட்டாரம்

தம்புள்ளை வீதி —42/1,42/6,42/7,42/12, 42/13,66/2.

குருநாகல் வீதி :—25,69/5,69/6,69/7,69/8,69/8எ,69/9,69/10, 69/14,69/15,77,79,81,87,93, 93/3,101,111,139.

மாத்தளை வீதி :—87/1,87/6,87/7,87/8,93,97,99,99/1,105,105/8, 105/10,113,113/8,113/16, 113/26, 113/27, 113/36, 113/46, 119, 121, 123,125,131,137,143,145,149,151,153,155,157,16,70, 76,84,90,90/5, 92,98,98/1,106,106/2,114,118, 118/2, 118/9, 118/10, 118/11,118/12, 118/13,118/15,118/16,118/21,118/31, 120, 120/1, 122, 126, 128,130, 132,138,138/1,140,140/ ,146.

2. ஆம் வட்டாரம்

தம்புள்ளை வீதி :—29/1,95/1,95/5,95/6, 95/9,96/10,95/11,95/13, 95/14,95/15,95/16,95/17,95/18,95/18எ, 95/19, 95/20, 96/21 ,95/22, 95/23,95/29,95/30,95/36,95/37,95/38,95/39,95/46.

ஜயதிலக மாவத்தை :—7,9,11,19,19/1,19/3, 19/4,29, 37,41, 47, 47/1,49,57,10/2,10/3,10/7,20,22,22/3,30,32, 36, 42, 46, 46/1, 50/2.

குருநாகல் வீதி :—56, 56/1,58,60,84,86,90,92,94,100,102.

3 ம் வட்டாரம்

தம்புள்ளை வீதி : 169/28,169/29,169/37,169/46,169/49,169/50, 169/51,169/52,169/56,169/57,169/64,169/67,169/68,193/1,207/4.

தர்மபால மாவத்தை :—57,81,14,16,20,30,30/1,30/2,30/3,36,38, 46,52,56,60,70,72,76,82,82/1.

4 ம் வட்டாரம்

தம்புள்ளை வீதி :—281/7,281/12,281/15,283/1,285,287எ,

காலவெவ வீதி : 87,87/1, 87/9,9103,111/1,111/2,111/3,115,121, 123,129, 131, 133, 133/1,133/3, 133/4,139, 139/1,141,145,149,151, 151/1,155,161,169,171,173,185, 191, 12/6, 12/7, 12/8, 12/9, 12/11, 12/16, 78,86 94,98,102,110,114,124.

5ம் வட்டாரம்

ஆனந்த ராஜகருணு மாவத்தை :—53,57,59,61,63,67,71,83,91,91/2 24,24/1,24/2,24/3,26,28,30,38,40,54,58, 60,60/1,60/4, 60/10, 60/14 70,72,80,82.

7-64—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

### கற்பிட்டி பட்டின சபை

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 161 ம் பிரிவுகளின் பிரகாரம் கீழே விபரிக்கப்படும் உத்தரவுப் பத்திரங்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்டிருக்கும் உத்தரவுப் பத்திர கட்டணங்களை இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து கற்பிட்டி பட்டின சபை அறவிடுமென்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

எஸ். காதர் இப்ராகிம்,
தலைவர், பட்டின சபை, கற்பிட்டி.

பட்டின சபைக் காரியாலயம்,
கற்பிட்டி, 30.3.73.

**அட்டவணை**

உத்தரவுப் பத்திரத்தின் தன்மைகள்

எந்த ஒரு இடத்தையும் தேவைகளுக்கு பாவிப்பதற்கான உத்தரவுப் பத்திர அனுமதி.

| | | வருட கட்டணம் ரூ. ச. |
|---|---|---|
| 1. | சுண்ணும்புக் காளவாய் .. .. | 25.00 |
| 2. | போறை விற்பனவு .. .. | 25 0 |
| 3. | தீவுப் பகுதிகளில் இருந்து கொண்டுவரும் கருவாட்டு மூடைகளுக்கு, ஒரு மூடைக்கு .. | 0 25 |
| 4. | ஹோட்டல் .. | 50 0 |
| 5. | ஆட்டிறைச்சி அல்லது மாட்டிறைச்சி கடைக்கு .. | 25 0 |
| 6. | கசாப்பு உத்தரவுப் பத்திரத்துக்கு .. | 25 0 |
| 7. | ஐஸ் உற்பத்தி இயந்திரத்திற்கு .. | 500 0 |

7-50—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

# நானாவித அறிவித்தல்கள்

### கரைவாகு வடக்கு கிராமசபை

இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1946 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தச்சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ்க்காணும் அட்டவணையில் காண்போரிடமிருந்து 1973 ம் ஆண்டுக்கு மாடு அடித்து இறைச்சி விற்பதற்கான உத்தரவுப் பத்திரம் தருமாறு விண்ணப்பம் கிடைத்திருக்கிறது.

இக்கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் மேற்குறிப்பிட்ட உத்தரவுப் பத்திரம் கொடுப்பதை மறுக்கவிரும்பின் மறுப்புக்கான காரணங்கள் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து (7) ஏழு நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்கனுப்பி வைக்கும்படி இத்தால் கேட்கப்படுகின்றது.

| தொடர் இல. | விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | விரும்பும் தொழில் | தொழில் செய்யுமிடம் |
|---|---|---|---|---|
| 1 | சீனிமுகம்மது முகமது சலீம் .. | பாண்டிருப்பு 1ம் குறிச்சி .. | மாட்டிறைச்சி விற்றல் .. | பெரியபள்ளிவாசல் சந்தை மருதமுனை 2 |

கிராமசபை அலுவலகம்,
கரைவாகு வடக்கு,
பெரிய நீலாவணை,
1973 ம் ஆடு ஆடி மீ. 26 ந உ.

இப்றுலெப்பை முகமது இஸ்மாயில், ஜே.பி,
தலைவர், கரைவாகு வடக்கு கிராமசபை.

7-185—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. **சனிக்கிழமைகளில்** மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. **சனிக்கிழமைகளில்** மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்டல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிரீம் கோட் புறொக்ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. | ச. | வெளியூர் ரூ. | ச. |
|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூ. | ச. | தபாற் செலவு (உள்ளூர்) ரூ. | ச. |
|---|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 0 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 0 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 0 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | 6.7.73 | வெள்ளி | .. | 29.6.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 13.7.73 | வெள்ளி | .. | 6.7.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 20.7.73 | வெள்ளி | .. | 13.7.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 27.7.73 | வெள்ளி | .. | 20.7.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| **ஓகத்து** | .. | 3.8.73 | வெள்ளி | .. | 27.7.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 10.8.73 | வெள்ளி | .. | 3.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 17.8.73 | வெள்ளி | .. | 10.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 24.8.73 | வெள்ளி | .. | 17.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 31.8.73 | வெள்ளி | .. | 24.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| **செத்தெம்பர்** | .. | 7.9.73 | வெள்ளி | .. | 31.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 14.9.73 | வெள்ளி | .. | 7.9.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 21.9.73 | வெள்ளி | .. | 14.9.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 28.9.73 | வெள்ளி | .. | 21.9.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.